விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 24 சனிக்கிழமை (07.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## விடுதலைப் புலிகளை முறியடிக்க கோத்தபாய எமக்குத் தேவை

### ஹெல உறுமயவின் ரத்ன தேரர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை முறியடிக்க கோத்தபாய ராஜபக்ஷ எமக்குத் தேவை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் வண.அத்துரலிய ரத்ன தேரர் பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளை முறியடிப்பதற்கு கோத்தபாய எமக்கு தேவை. 2001 செப்ரம்பர் 11 ஆம் திகதி உலக வர்த்தக மையம் மீது நடைபெற்ற தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி புஷ்சை பதவி விலகும்படி அமெரிக்கா கேட்கவில்லை.

ஆனால் அவர்கள் ஒன்றிணைந்து போராடினார்கள். இந்த நிலைமைகளில் மனித உரிமைகள் தொடர்பாக பேசுவது அர்த்தமற்றது. இன்று மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பேசுகின்றது.

ஆனால் அவர்களின் காலத்தில் 60 ஆயிரம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டிருந்தனர். 60 (04 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை கடத்தி பணம் பறிப்பதில் அமைச்சர்களுக்குத் தொடர்பு

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொது மக்களை கடத்தி பணம் பறிப்பதில் அமைச்சர்களுக்குத் தொடர்பு இருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா பேசுகையில்,

இனப்பிரச்சினையின் தீர்வுக்கான திட்டத்தை முன்வைக்கும் தனது பொறுப்புக்களை அரசாங்கம் தட்டிக்கழித்து வருகின்றது. அரசாங்கத்துக்கு நாட்டின் தற்போதைய பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறைஇல்லை. ஊழல்கள் என்றுமில்லாதவாறு இன்று அதிகரித்து விட்டது.

ஊழல் புரிவதற்கு அரசியல்வாதிகள் அனுமதிக்கப்படுகின்றனர். இதன் பலனாக அரசாங்கம் கவிழப் போகின்றது. மக்களை கடத்தி பணம் பறிப்பதில் அரசாங்க அமைச்சர்களின் பங்கும் உள்ளது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இக்குற்றசாட்டுக்குப் பதிலளித்த (04 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்க் கடலில் கடும் மோதல்

## புலிகளின் படகு மூழ்கடிப்பு-அரசு

(கொழும்பு)

இலங்கையின் வடமேற்கு மன்னார் கற்பிட்டிக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளுக்கும்கடற்படையினருக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்றை மூழ்கடித்ததாகக் கடற்படையினர் கூறியிருக்கின்றார்கள். (04 ஆம் பக்கம் பார்க்க)

## 7 படையினர் பலி; கலம் மூழ்கடிப்பு-புலிகள்

(கிளிநொச்சி)

மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் இலங்கைக் கடற்படையினரின் சுற்றுக்காவல் கலம் ஒன்று தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவிலிருந்து புலிகளுக்கு ஆயுதமாம்

(நியுயோர்க்)

அமெரிக்காவிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய முயன்ற ஆறு ஆசிய நாட்டவர்களை கைது செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்களுள் சிங்கப்பூரை சேர்ந்த ஹனிபா பி ஒஸ்மான் பிரதான குற்றவாளியாக காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் தொடங்கும் அவல சூழலில் வாழ்கிறோம்

### ஈஸ்டர் செய்தியில் யாழ்.ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உளப்பூர்வமான அர்ப்பணிப்போடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண் யும் மிக்க திறந்தவெளி சிறைச்சாலை வாழ்க்கையையே நடத்தி வருகின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, பசி, பட்டினி மட்டுமல்லா சிறைச் சாலைச் சூழலில் புதிய யுத்த நடவடிக்கைகளுக்கான ஆயுத்தங்கள் இடம் பெறுகின்ற ஒரு துயர நிலைமையே இங்கு நிலவுகின்றது எனவும் யாழ். ஆயர் தோமஸ் சௌந்

## ஊரடங்குச் சட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈஸ்டர் தினத்தை ஒட்டி இன்றும் அதி காலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்குமென பலாலி பாதுகாப்புப் படைத்தளம் அறிவித்துள்ளது. (ந-3)

பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்று தனது ஈஸ்டர் திருநாளை ஒட்டிய செய்தியில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆட்கள் கடத்தப்படுவது, காணாமல் போவது,கொல்லப்படுவது போன்ற பயங்கர மான ஒரு சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டு மக்கள் அச்சமும் பீதியும் உள நெருக்கடி கான தட்டுப்பாடு, பசி, பட்டினி மட்டுமல்லாமல், போக்குவரத்து வசதியற்ற துன்பநிலைமை குறித்த அவலக்குரல்களையே மக்களிடமிருந்து கேட்க முடிகின்றது.

நாட்டின் வடமுனையில் சொல்லில் அடங்க முடியாத அவலச் சூழ்நிலையில் நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். கடுமையான சட்டவிதிகளின் கீழ் திறந்த வெளிச் கின்றது எனவும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த, தமது கிராமங்களிலிருந்து அகதிகளாகி ஒன்றரை லட்சம் மக்கள் அகதி முகாம்களில் உணவுப் பற்றாக்குறைக்கும் மோசமான சுகாதார (04 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் விபத்து இராணுவச் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொதுமகன் ஒருவருடன் மோதுண்டதனால் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குறித்த சிப்பாய் படுகாயமடைந்த நிலையில் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

உயிரி (04 ஆம் பக்கம் பார்க்க)

## ★நாங்களும் போருக்குத் தயார்★

# ஜூனியர் விகடனுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி



(கிளிநொச்சி)

மீண்டும் குண்டு மழை பொழிய குருதி நதி பெருக்கெடுத்து ஓடுகிறது ஈழத்துத் தெருக்களில்.வான் புலிகளின் விமானத் தாக்குதல் உலகின் புருவத்தை உயர்த்திப் பார்க்க வைத்திருக்க,அதிர்ச்சியுடனும், மிரட்சியுடனும் திகிலடைந்து போயிருக்கிறது இலங்கை இராணுவம். இதன் தொடர்ச்சியாக இராமேஸ்வரம் பகுதிகளில் வைக்கப்பட்டிருக்கும் நவீன ராடர் கருவிகளை வைத்து இந்திய அரசு 24 மணி நேரமும் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகின்றது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் புலிகளின் அரசியல்துறைத் தலைவர் (02 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 'புலி விமானப்' பீதி மின்சாரம் 20 நிமிடம் துண்டிப்பு

விடுதலைப்புலிகளின் விமானம் வருகின்றது என்ற செய்தி பரவியதால் கொழும்பில் 20 நிமிடங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

கொழும்பின் சிங்கள நாளிதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் விமானம் மன்னார் வழியாகக் கொழும்பு நோக்கிப் பறப்பதாக நேற்று முன்தினம் மாலை தகவல் பரவியதாகவும் இதனையடுத்து மாலை 6.45 மணிமுதல் 7.05 மணிவரை கொழும்பில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


மிதிவெடியால் பாதிக்கப்பட்டவரும் சமூகத்தில் ஓர் அங்கத்தவரே.

சர்வோதயம்

unicef

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## எந்த அணி சூப்பர்?

லீக் சுற்றிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறியுள்ளன. லீக் சுற்றில் இவ்விரு அணிகள் மோதிய மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்ற அணிக்கு 2 புள்ளிகள் மேலதிகமாக (போனஸ்) வழங்கப்பட்டன.

இம் மேலதிக புள்ளிகளையும் சேர்ந்து சூப்பர் 8 சுற்றில் அணிகள் பெற்றுள்ள புள்ளி விபரம் வருமாறு:

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி | ஓட்ட சராசரி |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 3 | 3 | 0 | 6 | 2.01 |
| இலங்கை | 4 | 3 | 1 | 6 | 1.55 |
| நியூசிலாந்து | 3 | 3 | 0 | 6 | 1.44 |
| இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 | 0.02 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 4 | -0.35 |
| மேற்கிந்தியத்தீவுகள் | 4 | 1 | 3 | 2 | -1.18 |
| அயர்லாந்து | 3 | 0 | 3 | 0 | -0.93 |
| பங்களாதேஷ் | 3 | 0 | 3 | 0 | -3.36 |

அனுசரணை:-

மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்ட மாதம்



PEOPLE'S BANK

மக்களின் உயிர்நாடியான மக்கள் வங்கியில் 2007 மார்ச் 08-ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 08-ம் திகதி வரை மகளிர் அதிர்ஷ்ட சேமிப்புப் பத்திரத்தினைப் பெற்றுத் தங்கள் சேமிப்பினை இரண்டு மடங்காக்குங்கள்!

உங்கள் அதிர்ஷ்டத்தினைப் பரீட்சிக்க தங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கு இன்றே விரையுங்கள்!

தமிழ் புத்தாண்டு தினத்தன்று அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒவ்வொரு மக்கள் வங்கிக் கிளையிலும் நடைபெறும்.

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி

# இந்தியாவின் நிலைப்பாட்டை அறிய சந்திரசேகரன் தமிழகம் செல்வார்

சமாதான முனைப்புக்கள் தொடர்பாக தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் கருத்தை அறிந்து கொள்ளும் முகமாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திர சேகரன் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி தமிழகம் செல்லும் அவர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் நாட்டின் நிலைப்பாட்டையும் மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் தெரிந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசு பார்வையாளராக அல்லாது பங்கேற்கும் விதத்தில் செயற்பட வேண்டும் என்ற அழுத்தத்தை தமிழக முதல்வருக்கு தான் கொடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த சமாதான முனைப்பு தொடர்பாக தமிழகத்தின் கருத்தை அறிந்து கொண்டதன் பின்னர் அதனை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தெரியப் படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் பி.சந்திர சேகரன் கூறினார். (ந-3)

# கடத்தப்பட்ட கப்பல் மாலுமிகளை மீட்க கெனியா அரசுடன் இலங்கை தொடர்பு

(கொழும்பு)

சோமாலியா கடற்பிராந்தியத்திலிருந்து அண்மையில் இலங்கை மாலுமிகள்உட்பட 12 பேருடன் கடத்திச் செல்லப்பட்ட ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் நடவடிக்கைகளில்ஈடுபட்டிருந்த கப்பல் தொடர்பான விசாரணைகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கடத்தப்பட்ட கப்பலின் தலைவரும் ஐந்து பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் ஏனைய ஆறுபேர் கெனியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் நலன் குறித்து அறியும் நோக்கில் வெளிவிவகார அமைச்சு கெனிய அரசாங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளது.

மாலுமிகளை விடுவிப்பது குறித்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் காணப்படாத நிலையில் கெனியாவுக்கான இலங்கை தூதுவராலயம் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையரான கப்பலின் தலைவர் கப்பல் நிறுவன அதிகாரிகளுடன் உரையாடுகையில், கப்பல் மாலுமிகள் உயிருடன் நலமாக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இதுதவிர கடத்தல்காரர்கள் புதிய நிபந்தனைகளை விதித்த வண்ணம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-3)

# னியர் விகடனுக்கு...

சு.ப.தமிழ்ச்செல்வன் நம்முடைய கேள்விகளுக்கு விடையளிக்க முன்வந்தார்.

இலங்கை இராணுவத்தினர் ஒவ்வொரு முறை எமது மக்களின் மீது கொடூரமான விமானத் தாக் குதல்களை நடத்திய போதும் கொழும்பில் இருக்கும் அவர்களது கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்திலிருந் தே விமானங்களைக் கொண்டுவந்து குண்டு வீசுகின்றார்கள்.

செஞ்சோலைக் குழந்தைகளைக் கொன்றது, வாகரை, சம்பூர் என்று எத்தனையோ தாக்குதல்களைச் சந்தித்தோம். நீண்ட காலம் பொறுத்திருந்தோம். எவ்வளவோ சமாதான சமிக்ஞைகளை இலங்கை அரசுக்குக் கொடுத்தோம். எதையுமே ஏற்றுக் கொள்ளாத அரசு எமது மக்களை ஈவிரக்கமில்லாமல் கொலை செய்வதிலேயே குறியாகவிருந்தது.

எமது மக்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிர்வினையாகவும் ஒரு எச்சரிக்கையாகவுமே இந்த வான்படைத் தாக்குதல்களை மேற்கொண்டோம். இது எமது மக்களுக்கும் புலிகளுக்கும் கிடைத்த அபாரமான வெற்றி.

இந்த வான்படைத் தாக்குதல் ஒரு தொடக்கம்தான் என்கிற சு.ப.தமிழ்ச்செல்வனின் குரல் உறுதியும் மகிழ்ச்சியும் தொனிக்கின்றது.

**கேள்வி :-** வான்வழித் தாக்குதலை நடத்தி முடித்து விட்டு,இந்தத் தாக்குதலை நடத்தியது நாங்கள்தான் என்று அதனை உரக்கச் சொல்லி, உங்களின் இணையத் தளங்களில் செய்தி வெளியிட்டிருக்கின்றீர்கள். செய்தியினூடே வெளியிடப்பட்டுள்ள படங்களில் இருக்கின்ற விமாணங்களைக் கொண்டு இந்தத் தாக்குதலை நடத்த முடியாது என்று சில இராணுவப் பயிற்சியாளர்கள் கூறுகிறார்களே? அப்படியானால் நீங்கள் பயன்படுத்திய விமானங்கள் நவீன ரக விமானங்களா? அதை வெளியே காட்டாமல் வேறு விமானத்தைக் காட்டியது ஏன்?

**பதில் :-** தாக்குதலுக்கு என்ன விமானத்தைப் பயன்படுத்தினோம். எப்படிப் பயன்படுத்தினோம். அதன் தொழில்நுட்ப மற்றும் தாக்குதல் தந்திரங்கள் என்ன? என்பது மாதிரியான எந்தத் தகவலையும் ஒருபோதும் நாங்கள்யாருக்கும் தெரிவிப்பதில்லை.

இது ஒரு வரலாற்றுரீதியான வெற்றி அவ்வளவுதான். அதேபோல விமானத்தை வைத்து தாக்குதல் நடத்தியதை நாங்கள் வெளியுலகிற்றுச் சொல்லியாக வேண்டிய கட்டாயம் இருந்ததாலேயே அதனை வெளியே கூறினோமே தவிர வெற்றி விளம்பரத்திற்காக அதனைச் சொல்லவில்லை என்பதையும் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏதோ விடுதலைப்புலிகளை அடக்கி ஒடுக்கிவிட்டோம் என்பது போன்றதொரு மாயையைத்தான் தொடர்ந்து இலங்கை அரசும் இராணுவமும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அப்பாவி மக்களை கொன்று போட்டு வீரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். இதே நிலை தொடரக் கூடாது என்பதற்காகத்தான் வான்வழித்தாக்குதல் நடத்தி எங்கள்எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றோம்.

இதன் பிறகாவது அரசும் இராணுவமும் தங்களது போக்கை மாற்றிக்கொள்ள வில்லை என்றால் நிறைய விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

**கேள்வி:-** உலக நாடுகளில் உங்களைப் பயங்கரவாத இயக்கமாகத்தான் சித்திரிக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இப்படி வான்வெளித் தாக்குதல் எல்லாம் நீங்கள் நடத்திக் கொண்டிருந்தால் அது உலக நாடுகள் மத்தியில் உங்கள் மீதான பதற்றத்தைத் தானே அதிகரிக்கச் செய்யும்?

**பதில்:-** உலக நாடுகள் எமது படைகளைப் பார்த்து பதற்றப்பட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் இலங்கையில் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட எம் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோமே தவிர எங்கள் போராட்டம் சர்வதேச பயங்கரவாதம்அல்ல.

எமது இலக்கு மக்களை அழிக்கும் எதிரிகளிடமிருந்து காப்பதுதானே தவிர அப்பாவி மக்களைக் கொல்வதில்லை. எமது உணர்வு பூர்வமான தீரமிக்க போரை பயங்கரவாதிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும் தவறான கண்ணோட்டமாகும்.

எங்கள் போராட்டத்தில் பயங்கரவாதம் என்பதெல்லாம் ஒருபோதும் கிடையாது. இது உலக நாடுகள் அனைத்துக்கும் மிகத் தெளிவாகத் தெரியும். நாங்கள் நினைத்திருந்தால் கடைசியாக நடந்த வான்வெளித் தாக்குதலின்போது கூட பொதுமக்கள் கூடும் இடங்களில் தாக்குதலை நடத்தியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை.

இராணுவத் தளம் இருக்கும்இடத்தைத் தான் குறிவைத்தோம். இது ல்லாம்தான் வெளிப்படையாக எல்லோரு ம் தெரிந்திருக்கின்றது. அப்படியிருக்கு ாது எங்களை உலக நாடுகள் எப்படி பயங்கரவாத இயக்கமாகப் பார்க்க முடியும்.

**கேள்வி:-** புலிகளுக்காக பால்ரஸ் குண்டுகளையும், இரும்புக் குண்டுகளையும் தமிழகத்திலிருந்து கடத்துவதாகத் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.நீங்கள் ஏன் ஆயுதங்களைக் கடத்த தமிழகத்தைத் தளமாகப் பயன்படுத்துகின்றீர்கள்?

**பதில்:-** தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் புரிகிற கொடுமைகளுக்கு எதிராக தமிழகத்தில் ஏற்பட்டு வருகின்ற ஆதரவுப் போக்கை கொச்சைப்படுத்துகிற விதமாகத் திட்டமிட்டுப் பரப்புகின்ற பொய்ப் பிரசாரமாகத் தான் இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழகத்திலிருந்து ஆயுதங்களையோ வெடிமருந்துகளையோ கடத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எமக்குத் தேவையான ஆயுதங்கள் எம்மிடமே போதுமான அளவில் இருக்கின்றன.

தமிழரின் தாயகப் பகுதிகள் முழுக்க உணவுப் பொருள்கள், மருந்துகள், அத்தியாவசியப் பொருள்கள் என சகல பொருள்களும் தடை செய்யப்பட்டதன் விளைவு அங்கே மக்கள் பட்டினியிலும் நோயிலும் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அப்படித் தவிக்கும் போது இலட்சக் கணக்கான எம் மக்களுக்கு உதவிகள் செய்யும் முகமாகத் தமிழகத்திலிருந்து சிலர் ஆதரவுக் கரம் கொடுகின்றார்கள். இது காலம் காலமாக நடக்கின்ற ஒன்றுதான். அதை இப்போது ஏன் பெரிதுபடுத்துகிறார்கள் என்று புரியவில்லை. இதுதான் எங்களை மிகவும் கவலையடையச் செய்கின்றது.

தமிழகத்திலிருந்து கடத்தியதாகச் சொல்லப்படும் ஈயக் குண்டுகளையும் சைக்கிள் பேரிங்குகளையும் பால்ரஸையும் பெரும் ஆயுதங்களாகப் பிரசாரப்படுத்துகின்றார்கள் அவர்கள். அப்படிச்சொல்வதில் துளியும் உண்மைகள் இல்லை.

நவீன ரக ஆயுதத் தொழில் நுட்பத்தில் நாங்கள் பல மைல் கற்களைக் கடந்துவிட்டோம் என்பதை இந்த நேரத்தில் பணிவுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அப்படியிருக்கும் போது பால்ரஸ், ஈயக் குண்டுகள் போன்றவற்றை எல்லாம் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதமாகக் கடத்துகின்றார்கள் என்று சொல்லி தங்களுடைய அறியாமையினால் எங்கள் வளர்ச்சியை யாரும் சிறுமைப்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கேள்வி:-** சமீபத்தில் உங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தற்கொலைப் படையினர் சிலர் இந்தியக் கடற்பகுதியில் வைத்து கடலோரக் காவல் படையினரால் பிடிக்கப்பட்டார்கள். பிடிபட்டவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் பிடிபட்டபோது கைப்பற்றப்பட்ட படகு ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டுகள் இருப்பதாக அறிந்து சென்னைக் கடற்பகுதியில்வைத்து அதனை வெடித்துச் சிதற வைத்திருக்கின்றார்கள். அப்படியிருக்கும் போது இந்தியக் கடல்எல்லைக்குள் உங்கள் படகுகளுக்கு என்ன வேலை? இது அத்துமீறல் இல்லையா?

**பதில்:-** எங்கள் தாய்மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகளை எதிர்த்து எமது கடற்படை உரமுடன் போராடி வருகின்றது. எங்களின் படகுகளோ தாக்குதல் கலங்களோ எதுவும் இந்தியக் கடல்எல்லைக்குள் வந்ததில்லை. சிறந்த முறையில் பயிற்சி பெற்ற எமது மாலுமிகள் எமது எல்லைகளைத் தாண்டிச் செல்வதில்லை. இந்த விடயங்களில் எல்லாம் நாங்கள் மிகவும் தெளிவாகவே செயற்பட்டுக்

(04 ஆம் பக்கம் பார்க்க)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்

சச்சியா ஹாட்-வெயர்ஸ் அன் எலக்றிக்கல்ஸ்

ஆதரவில் நடாத்திய அதிர்ஸ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு - 2679

2-ம் பரிசு - 1636

3-ம் பரிசு - 1482

மேலும் ஏழு ஆறுதல் பரிசில்கள்

1642, 2871, 1491, 2487, 1832, 1591, 2672

செயலாளர்

இந்து வாலிபர் சங்கம்

வட்டுக்கோட்டை

(C-686)

சேர்ட்

தரமான சேர்ட்டுக்கள் மொத்த விற்பனைக்குண்டு

கணேசன் சென்ரர்

கே.கே.எஸ் றோட்,

இணுவில்

021 222 5708

திருமணக்கார் (குளிரூட்டியது)

வாடகைக்கு



- திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள் போன்ற அனைத்துச் சேவைகளுக்கும், புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட]

குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்பு ரட்ணம்,

சோமசுந்தரம் அவன்யூ. சுண்டுக்குளி

யாழ்ப்பாணம்.

T.P: 0777903093,0777246117

எவ்வளவுக்கெவ்வளவு கெட்டவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவுக்களவு துன்பங்களை மனிதர் அனுபவிக்கின்றனர்.

-பிளேட்டோ

வலம்புரி

# சர்வதேச மன்னிப்புச் சபை மீது அரசு ஆவேசப்படலாகாது

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசு மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல், கைது, விசாரணையற்ற தடுத்து வைப்பு எனப் பல்வகை மனித உரிமை மீறல்கள் நடந்து வருகின்றன.

இது தொடர்பில் அனைத்துலக கண்காணிப்புக் குழுவை இலங்கையில் அமைக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தி வருகின்றது.

எனினும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கையை செவிசாய்க்கும் நிலையில், இலங்கை அரசு இருப்பதாகத் தெரியவில்லை.

மனித உரிமை மீறல்கள் பற்றி இப்போது எல்லாம் பேச முடியாது என ஜாதிகஹெல உறுமயவும், அரச தரப்பைச் சேர்ந்த சிலரும் கூறுகின்றனர்.

இதிலிருந்து இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தாராளமாக நடக்கின்றது என்ற முடிபுக்கு வரமுடியும்.

மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவது பற்றி இப்போது பேசமுடியாது எனக் கூறுவோரிடம் அதைப்பற்றி கதைப்பதில் எந்தப் பயனும் இருக்க முடியாது.

ஒரு ஜனநாயக நாட்டில் அனைத்து இன மக்களும் சமன் என்ற கொள்கை முதலில் கடைபிடிக்க வேண்டும். அப்போது தான் மனித உரிமைமீறல் தொடர்பில் அதிக கூடிய கவனம் எடுக்கப்படும்.

இதை விடுத்து இன ரீதியான பாகுபாட்டின் அடிப்படையில் ஆட்சி அதிகாரம் செலுத்தப்படுமாயின் அங்கு அராஜகமும், அடாவடித்தனமுமே மேலோங்கி இருக்கும்.

இதுவே தற்போது இலங்கையில் நடைபெறுகிறது. இதன் அடிப்படையில் ஆட்கடத்தல் சம்பவங்களும், கொலைச் சம்பவங்களும் சர்வ சாதாரணமாக நடந்தேறுகின்றன.

இது விடயத்தில் தனது பணியை ஆற்ற வேண்டிய சர்வதேச மன்னிப்புச் சபைக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

இதனால் மனித உரிமையை பாதுகாக்கும் பெருநோக்கில் சர்வதேச மன்னிப்புச் சபை, உலக கிண்ணத்திற்காக இடம் பெறும் துடுப்பாட்ட போட்டியில் இலங்கை பற்றிய பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது.

ஒரு நாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்காக, துடுப்பாட்டம் இடம் பெறும் இடத்தில் மட்டுமன்றி எங்கும் பிரசாரம் செய்யலாம். அதில் எந்தத் தவறும் இருக்க முடியாது.

இது விடயத்தில் இலங்கை அரசு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு நன்றி கூறிக் கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை உலகறியச் செய்வதன் ஊடாக, இலங் கையில் சமாதானத்தை வலியுறுத்தும், சமாதானத்துக்கான தளத்தை அமைக்கும் நடவடிக்கைகளில் சர்வதேச சமூகம் ஈடுபடுவதுடன் அதன் உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதை விடுத்து சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரசாரம் தவறானது; நீதியற்றது எனக் கோஷம் எழுப்புவது பொருத்துடையதல்ல.

எனவே இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசனைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொள்வதுடன் அனைத்துலக கண்காணிப்புக்குழுவை இலங்கையில் அமைப்பதற்கும் அனுமதி அளிப்பதே ஒரே வழியாகும்.

# சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரசாரம் இலங்கை வெளிவிவகார அமைச்சு கண்டனம்

இலங்கை மனித உரிமைகள் தொடர்பில் கரிபியனில் நடைபெறும் உலகக் கிண்ணத் துடுப்பாட்ட போட்டியில் துடுப்பாட்ட பந்தில் கையொப்பங்களை சேகரித்து வரும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் செயற்பாட்டுக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்;

துடுப்பாட்ட விளையாட்டை அரசியல் மயப்படுத்தி அனைத்துலக மன்னிப்புச் சபை தவறாக நடக்க முற்படுகிறது. இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு அனைத்துலக கண்காணிப்புக்குழுவை இலங்கையில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு தேடும் முகமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய தேவையில்லாத வேலை கவலையை தருகின்றது. நடந்து வரும் துடுப்பாட்டப் போட்டியில் நடுநிலைமையை பேணும் பொருட்டு அனைத்துலக துடுப்பாட்ட சபை தனது பிரதிநிதிகளின் மூலம் இந்நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரிபியனில் உலக கோப்பைக்கான துடுப்பாட்டப் போட்டி நடைபெறும் போது மேற்கொள்ளப்படும் எந்த மனித உரிமை போராட்டங்களும் தீமையான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் விளையாட்டுக்கள் எப்போதும் இலங்கையை ஒருங்கிணைத்து வைத்துள்ளன. அது பலதரப்பட்ட மக்களிடம் அமைதியை ஊக்குவிக்கும் காரணி.

இலங்கையின் தேசிய துடுப்பாட்டக் குழு சிங்கள, தமிழ், முஸ்லிம் ,பறங்கியர் என பலதரப்பட்ட இன மக்களையும் கொண்டுள்ளதாக ஜெனீவாவில் நடைபெற்ற 4ஆவது மனித உரிமை சபைக் கூட்டத் தொடரின் போது அனைத்துலக மன்னிப்புச் சபை பிரதிநிதிகளிடம் இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

மன்னிப்புச் சபையினால் நடத்தப்படும் இந்த போராட்டம் விளையாட்டுக்களை விரும்பும் மக்களின் நம்பிக்கையை சீரழிப்பதுடன் இலங்கை மீதான நல்லெண்ணத்தையும் பாதிக்கும் என வெளிவிவகார அமைச்சினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# கால நிலை மாற்றத்தால் கோடிக் கணக்கானோர் பாதிக்கப்படுவர்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை அடுத்து வரும் தசாப்தங்களில் காலநிலை மாற்றத்தால், பாதிக்கப்படும் என்று உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையிலான குழுவின் அறிக்கை இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

ஆனரல் வறிய நாடுகளில் உள்ள மக்களே கால நிலை மாற்றத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் என்று அந்தக் குழுவின் தலைவர் ராஜேந்திரா பச்செளரி எச்சரித்துள்ளார்.

உலகின் உள்ள அனைத்துக் கண்டங்களையும் இந்தக் காலநிலை மாற்றம் பாதிக்கும் என்பதற்கான ஆதாரமான தரவுகளை முதற்தடவையாக விஞ்ஞானிகள் முன்வைத்திருப்பதாக இந்த அறிக்கையைத் தயாரிக்க உதவிய மற்றுமொரு நிபுணரான மார்ட்டின் பாரி செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கூறியுள்ளார்.

ஆசிய பெரிய டெல்டா பிரதேசங்கள், சகாராவுக்குத் தெற்கே உள்ள ஆபிரிக்க பிராந்தியம், சிறிய தீவுகள் மற்றும் துருவப் பிராந்தியம் ஆகியவற்றையே இந்த மாற்றங்கள் மிகவும் அதிகமாக பாதிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (ந-5)

# 108 அடி தானியங்கி அனுமர் சிலை கின்னஸ் சாதனைக்கு முயற்சி

உலகிலேயே மிக அதிக உயரமுள்ள தானியங்கி ஆஞ்சநேயர் சிலை டில்லியில் வைக்கப்பட்டுள்ளது. 108 அடி உயரமுள்ள இந்த அனுமர் சிலை கின்னஸ் சாதனை படைக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. டில்லியில் புசா ரோடு சந்திப்பில் இந்த மிகப் பிரமாண்ட அனுமர் சிலை வைக்கப்பட்டுள்ளது. 13 ஆண்டுகளாக இதற்கான பணிகள் நடந்து வந்தன.

கடந்த வாரம் பணிகள் எல்லாம் முடிந்து கடந்த திங்கள் அன்று பக்தர்களுக்கு ஆஞ்சநேயர் தரிசனம் தர ஆரம்பித்தார். டில்லியில் உள்ள மிகப் பெரிய கோபுரம் என்றால் குதுப் மினார் தான் அதன் உயரம் 239அடி . அதை அடுத்து இந்த ஆஞ்சநேயர் சிலை காணப்படுகின்றது.

ராம நாமம் 108 என்பதால் இந்த அனுமர் சிலை 108 அடி உயரமாக் அமைக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிக உயரமான அனுமர் சிலை இதுதான் என்று கோவில் அறங்காவலர் சபையின் பொதுச் செயலர் ஓம் பிரகாஷ் கூறினார். அவர் கூறியதாவது. இந்த சிலையில் நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அனுமர் கைகள், அவர் மார்பை மறைத்தபடி தான் இருக்கும். கீழே இருந்து பட்டனை அழுத்தினால் அந்த கைகள் திறக்கும். அப்போது ராமர், சீதை சிலை உள்ள டிராலி நகர்ந்து அனுமர் மார்பில் நிற்கும். அனுமர் நெஞ்சில் குடிகொண்டுள்ளவர்கள் ராமர், சீதை என்பதை விளக்கவே இப்படி தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் தானியங்கி சிலை என்ற வகையிலும் இந்த அனுமர் சிலைதான் முதலிடம் பெறும். நாங்கள் கின்னஸ் சாதனை புத்தகத்தில் ஆஞ்சநேயர் சிலை பற்றிய விபரம் அச்சிட முயற்சி செய்து வருகிறோம் என அவர் தெரிவித்தார். (ந-5)

# திருகோணமலையில் இளைஞன் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை பாலையூற்று கிராமத்தில் வெள்ளை வானில் வந்தோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாலையூற்றில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. முன்னதாக அடையாளம் தெரியாத நபர்களால் முற்பகல் 10.30 மணியளவில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார். (ந-5)

# தென்பகுதியில் 16 தமிழர் கைது

(கொழும்பு)

இராணுவத்தினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் தென்பகுதியில் 16 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளவத்தை மற்றும் கதிர்காமம் பகுதிகளில் நேற்றுக் காலை தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளவத்தையில் 2 பெண்கள் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டு வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கதிர்காமம் பகுதியில் 13 மலையகத் தமிழர்கள்கைது செய்யப்பட்டனர். கௌதமிகம காலனிப் பகுதியில் உறவினர்கள் வீட்டில் அவர்கள் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டோர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ந-5)

# சட்டவிரோத மின்பாவனை அதிகாரிகளால் கண்டுபிடிப்பு

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்இணைப்பு பெற்ற பலர் மின்சார சபை அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டனர். இதன்போது பயன்படுத்தப்பட்ட மின் இணைப்புப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

காரைநகர் வடகிழக்கு, கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் அப்பிரிவு கிராம சேவையாளர்களுடன் இணைந்து வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் உட்பட மின்சாரசபை அதிகாரிகளால் சோதனையிடப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ந-246)

# காரைநகரில் ச.செ.ச.உதவி

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விதவைகள், அநாதைகள் வறியவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவு பொருட்களை கடந்த சில தினங்களுக்கு முன்னர் வழங்கியுள்ளது.

வீட்டுப் பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டதால் அவை தமக்கு மிகவும் உபயோகமாக உள்ளதாகப் பயனாளிகள் தெரிவித்துள்ளனர். (ந-246)

# இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை
## அமெரிக்க தூதுவர் சோமவன்சவுக்கு யோசனை

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமர சிங்காவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளக் நேற்று முன்தினம் சந்தித்து நாட்டின் தற்போதைய இனப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது சோமவன்ச அமரசிங்க பயங்கரவாதத்திற்கு எதிராக போராட வேண்டும். அப்போதே நாட்டில் அமைதி ஏற்படுமெனத் தெரிவித்தார்.

இக்கருத்தை மறுத்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஏற்புடையது அல்ல எனக் குறிப்பிட்டார்.

மேலும் ஜே.வி.பி அனைத்துக்கட்சிக் குழுவிலிருந்து விலகியதற்கான காரணத்தை சோமவன்ச அமரசிங்கவிடம் றொபேட் ஓ பிளக் வினவினார்.

இதற்குப் பதிலளித்த சோமவன்ச, 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்தனர். அவர்கள் நிராகரித்தற்கு காரணம் ஐ.தே.க இனப்பிரச்சினைத் தீர்வாக நாட்டை பிளவுபட வைப்பதனை தடுப்பதற்காகும்.

எனவே மக்களின் எதிர்பார்ப்பு ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையேயாகும். இத் தீர்வுத்திட்டத்திற்கு முரணான கொள்கையைக் கொண்டதே சர்வகட்சி மாநாடு எனக் கூறினார்.

மேலும் இலங்கை அரசிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே நடைபெற்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தை எமக்கும் நாட்டு மக்களுக்கும் புரியக் கூடிய வகையில் வெளியிட வேண்டும் அல்லது பாராளுமன்றல் விவாதத்திற்கு கொண்டு வர வேண்டும்.

அல்லாவிடின் அமெரிக்காவை நாமும் மக்களும் சந்தேகக் கண் கொண்டே பார்ப்போம் என்றும் சோமவன்ச அமரசிங்க கூறினார். (ந-5)

# மாத்தளை-காலி வான் பரப்பில் சந்தேகத்திற்கிடமான விமானங்கள்

(கொழும்பு)

மாத்தளை-காலி வான்பரப்பில் சந்தேகத்திற்கிடமான விமானங்கள் பறப்பதாக விமானப் படையினருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

சந்தேகத்திற்கிடமான விமானம் தொடர்பாக பொதுமக்கள் அவதானிப்பின் உடனடியாக தெரியப்படுத்துமாறும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## அமெரிக்கா...

ஒஸ்மான் இரு இந்தோனேசிய நாட்டவர்களுடன் இணைந்து 53 இராணுவ ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளார்.

ஏற்கனவே 9லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒரு தொகுதி ஆயுதங்கள் அனுப்ப தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கொக்குவிலில்...

ழுந்தவர் கொழும்பைச் சேர்ந்த எஸ்.ஆரிய தாஸா (வயது -30) என இராணுவத்தினர் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவானும் யாழ். பதில் நீதிவானுமாகிய திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-5)

# மன்னார்க் கடலில் கடும் மோதல்....
## புலிகளின் படகு...

கடற்படையின் மூன்று கரையோரப் பாதுகாப்புப் படகுகள், விடுதலைப்புலிகளின் ஐந்து படகுகளைக் கற்பிட்டி வத்தலங்குண்டு கடற்பரப்பில் கண்டு, அவற்றுடன் மோதியதாகவும் இந்த மோதலில் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படகொன்றை மூழ்கடித்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த மோதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் சிறுகாயத்திற்குள்ளாகியதாகவும் கடற்படையின் காவல்படகு சிறிய சேதத்திற்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. புலிகளின் எஞ்சிய நான்கு படகுகளும் மன்னார் சிலாபத்துறையை நோக்கித் தப்பி ஓடிவிட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளார்கள். (ந-5)

## 7 படையினர்...

நேற்றுக்காலை 11.30 மணியளவில் கடற்புலிகள் வழமையான கடல் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அரச கடற்படையினருக்குச் சொந்தமான 3 சிறிய ரக சுற்றுக் காவல் கலங்கள் கடற்புலிகளின் படகுகளை நெருங்கி வந்து தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலுக்கு எதிராக கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரது சுற்றுக்காவல் கலம் ஒன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் 7 கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். ஏனைய 2 கடற்படைப் படகுகள் சேதமடைந்துள்ளன.

கொல்லப்பட்ட கடற்படையினரின் சடலங்களை கடற்படையினர் தமது மீட்புப் படகில் ஏற்


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான விய வருஷம் பங்குனித் திங்கள் 24 ஆம்நாள் (07.04.2007) சனிக்கிழமை முற்பகல் 10.47 மணிமுதல் 12.30 மணி வரையுள்ள அநுச நட்சத்திரமும் சித்தயோகமும் மிதுனலக்கினமும் கூடியசுபமுகூர்த்த சுப வேளையில்,

திரு.திருமதி இரத்தினவேலு தம்பதியரின் புத்திரன்
திருவளர் செல்வன்
**பிறேமகுமார்**
(பிறேம் நகைமாட உரிமையாளர்)
அவர்களுக்கும்

திரு.திருமதி ஆத்மநாதன் தம்பதியினரின் புத்திரி
திருவளர் செல்வி
**ரஞ்சினி**
அவர்களுக்கும்,

இறைவன் திருவருள் துணை கொண்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயத்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் :- 08.04.2007 ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி மு.இரத்தினவேலு (சந்தனம்)
நாகேஸ்வரி குடும்பத்தினர்
திரு.திருமதி சிவகுமார் குடும்பத்தினர்
திரு.திருமதி செல்வராசன் குடும்பத்தினர்
சேச் லேன், கூழாவடி, ஆனைக்கோட்டை.

திரு.திருமதி ஆத்மநாதன் குடும்பத்தினர்
செல்வன் ஆ.வசந்தகுமார்
(சகோதரன்)
உடுவில் தெற்கு, பாலாவோடை,
மானிப்பாய்.

இரு வீட்டார் அழைப்பு

(C-அ-645)

பிறேம் நகைமாடம், பிறேம் பிளாசா, மானிப்பாய்.


## மீண்டும்...

நிலைமைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளார்கள். மன்னார் மடுமாதா பிரதேசத்தில் மக்கள் கண்ணி வெடிகளின் அச்சுறுத்தலுக்கு ஆளாகி அச்சத்தின் பிடியில் சிக்கியுள்ளார்கள்.

இந்நிலையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமாதானத்தை மீண்டும் வலியுறுத்தும் அதேவேளை, உளப்பூர்வமான அர்ப்பணிப்போடு இரு தரப்பினரும் பல ஆண்டுகளாக நீடித்துச் செல்லும் இனப்பிரச்சினைக்கு நீதியும் நியாயமும் மிக்க சமாதானத் தீர்வை ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும் என்றும் யாழ்.ஆயர் தனது ஈஸ்டர் திருநாளை ஒட்டிய செய்தியில் கூறியுள்ளார். (ந-3,5)

## விடுதலைப்...

ஆயிரம் மக்களை கொலை செய்தது மனித உரிமை மீறல் இல்லையா? என்றார் அவர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமா தெரிவிக்கையில், கோத்தபாய ஒரு தரமான இராணுவ வியூகவியலாளர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பல வெற்றிகரமான தாக்குதல்களுக்கு அவரே காரணம்.

லலித் அத்துலத்து முதலியின் காலத்தில் 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமராட்சி இராணுவ நடவடிக்கையான ஒபரேசன் லிபரசேனுக்கு அவரது பங்கு அளப்பரியது. மிக் ரக வானூர்தி கொள்வனவு தொடர்பாக அவரை குற்றம் சுமத்த முடியாது. (ந-5)

## மக்களை கடத்தி பணம்...

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பேசுகையில்,

ஆட்கடத்தல்களில் அரசாங்கத்துக்கு தொடர்பு கிடையாது. கடத்தப்பட்டவர்களின் சில உறவினர்கள் என்னை சந்தித்து அது தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

அதேசமயம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து இந்தப் பிரச்சினையை முடிபுக்குக் கொண்டு வருமாறு பாதுகாப்புச் செயலருடன் பேசியுள்ளேன். சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் சில கடத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஊழல்கள் தொடர்பாக பேசும் அருகதை கிடையாது. ஏனெனில் அவர்களின் காலத்தில் தான் அது அதிகமாக இருந்தது என்றார். (ந-5)

## ஜூனியர் விகடனுக்கு...

கொண்டிருக்கின்றோம்.

உண்மைகள் அப்படியிருக்கும் போது படகுகளைப் பிடித்தோம். அதில் குண்டு இருந்தது என்று சொல்வதெல்லாம் எதன் அடிப்படையில் என்பதும் எங்களுக்குப் புரியவில்லை.

பேசத் தயார் என்பதுபோல அறிவித்துவிட்டு இப்போது பேச்சுவார்த்தை இனிமேல் கிடையாது. போர்தான் என்பதுபோல இலங்கை அரசுத்தரப்பு காரியங்களில் இறங்கி இருக்கிறதாமே?

பதில்:- நியாயமான நேர்மையான

வடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அரச கடற்படையினருக்குச் சொநதமான 3 சிறிய ரக சுற்றுக் காவல் கலங்கள் கடற்புலிகளின் படகுகளை நெருங்கி வந்து தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலுக்கு எதிராக 'கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரது சுற்றுக்காவல் கலம் ஒன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் 7 கடற்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். ஏனைய 2 கடற்படைப் படகுகள் சேதமடைந்துள்ளன.

கொல்லப்பட்ட கடற்படையினரின் சடலங்களை கடற்படையினர் தமது மீட்புப் படகில் ஏற்றிச் சென்றதனை தாக்குதல் நடத்தி கடற்புலிகள் உறுதிப்படுத்தியிருப்பதாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார். கடற்புலிகளுக்கு எதுவித இழப்புகளுமின்றி கலங்கள் பத்திரமாகத்தளம் திரும்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# மரண அறிவித்தல்



## திருமதி பகீரதி யசோதரன்

விஸ்வகுல வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 212 கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகீரதி யசோதரன் 06.04.2007 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சின்னத்துரை யசோதரனின் (ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் ந.தேவராசா (இளைப்பாறிய ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி) திருமதி தேவராசா தேவமணியின் அன்பு மகளும் தே.பகீரதன், (G.T.Z) தே.பரணீதரன் (T.O, கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்) செல்வி தே.பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வன் ய.கஜிந், செல்வி ய.ஹர்ணி ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி ப.வித்யா (கோப்பாய் ஆசிரிய கலாசாலை) வின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.36, செட்டித் தெரு நல்லூரிலுள்ள இல்லத்தில் இன்று (07.04.2007) காலை 9.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
ந.தேவராசா
(தந்தை)

36, செட்டித் தெரு,
நல்லூர்.

(809)

கொண்டிருக்கின்றோம்.

உண்மைகள் அப்படியிருக்கும் போது படகுகளைப் பிடித்தோம். அதில் குண்டு இருந்தது என்று சொல்வதெல்லாம் எதன் அடிப்படையில் என்பதும் எங்களுக்குப் புரியவில்லை.

**கேள்வி:-** புலிகளின் அபிரிதமான இராணுவப் பலம் இந்தியப் பிராந்தியத்தின் அமைதிக்கு ஒரு அச்சுறுத்தல் என்று இலங்கை அரசு கருத்துத்தெரிவிக்கின்றதே? உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?

**பதில்:-** விடுதலைப்புலிகளால் எவருக்கும் பிரச்சினை வரப் போவதில்லை. இவ்வாறு உள்நோக்கத்தோடு அறிக்கை வெளியிடும் இலங்கை அரசுதான் பாகிஸ்தானிலிருந்தும் சீனாவிலிருந்தும் ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கின்றது.

அதை வைத்துப் பார்க்கும் போது ஆயுதங்களை பல நாடுகளிலிருந்து வாங்கிக் குவிக்கும்இலங்கைஅரசாங்கத்தால்தானே இந்தியாவிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. இப்படி எல்லாம் அவர்கள்செய்வது இந்தியாவுக்கும் நன்கு தெரியும்.

அதனால் அதனை மறைக்கும் விதமாக நாங்கள் ஏதோ இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்று சொல்லி பிரச்சினையை திசை திருப்பி விடுகின்றார்கள். இந்த உள் நோக்கத்தைத் தான் இந்தியா போன்ற அமைதி வழி செல்லும் நாடுகள் மிக நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கும் ஈழத்திலிருக்கும் வம்சாவளித் தமிழர்களுக்கும் தொப்புள்கொடி உறவிருக்கின்றது என்பதை எல்லாம் நாங்கள் உணர்ந்தேதான் இருக்கின்றோம் .அதனால் இந்திய அமைதிக்கு எங்களால் ஒரு போதும் பங்கம் வராது.

**கேள்வி:-** புலிகள் வான்வெளித் தாக்குதலை நடத்தியதும் மீண்டும் புலிகளோடு பேசத் தயார் என்பதுபோல அறிவித்துவிட்டு இப்போது பேச்சுவார்த்தை இனிமேல் கிடையாது. போர்தான் என்பதுபோல இலங்கை அரசுத்தரப்பு காரியங்களில் இறங்கி இருக்கிறதாமே?

**பதில்:-** நியாயமான நேர்மையான அணுகுமுறையோடு பேச்சுவார்த்தை முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் எப்போதுமே புலிகள் தரப்பில் அதனை வரவேற்கத்தான் செய்வோம்.

ஆனால் யுத்தநிறுத்த உடன்பாட்டையே தகர்த்து தமிழ் மக்கள்மீது இனப்படுகொலையைத் தீவிரப்படுத்தி எமது பிரதேசங்களை ஆக்கிரமித்து யுத்த முனைப்பும் கொலை வெறியும் காட்டிக் கொண்டு இன்னொரு பக்கம் பேச்சுவார்த்தை பற்றியும் அமைதி பற்றியும் பேசுவ்தில் எவ்வித அர்த்தமும் இல்லை. இப்படித் தொடர்ந்து அரசு போலித்தனமான கோஷங்களுடன் நடந்து கொண்டிருந்தால் அவர்களை நம்பி பேச்சுவார்த்தைக்குப் போய்தான் என்ன பலன் ஏற்பட்டு விடப்போகின்றது சொல்லுங்கள்.

அதற்காக நாங்கள் போருக்குப் பயப்படுகின்றோம் என்பதுபோல யாரும் நினைத்து விடக்கூடாது. நாங்களும் போருக்குத் தயார் தான். அது நியாயமான வழியில் இருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை.

இது நாள்வரையில் அப்பாவித் தமிழர்கள் மீதுதான் இலங்கை அரசு குண்டுகளை வீசிக் கொண்டிருக்கின்றது. சர்வதேச போர் இலக்கணத்தோடு அவர்கள் நடந்து கொள்வார்களானால் பேச்சுவார்த்தைத் தேவையில்லைத்தான்.

இலங்கை அரசாங்கம் இதற்காக பொது வாக்கெடுப்பு நடத்தி மக்களிடம் கருத்துக் கேட்கப் போவதாகக் கூட செய்திகள் வருகின்றது. அந்த வாக்கெடுப்பையும்அவர்கள் முறையாக செய்யமாட்டார்கள் என்பதுதான் எங்கள் கணிப்பு. (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.